1. செல் கொள்கையை உருவாக்கியவர்

A) டார்வின் B) மெண்டல்

C) ஸ்க்வான் D) ஒப்ரான்.

Cell theory was propounded by

A) Darwin B) Mendel

C) Schwann D) Operon.

2. வட்ட வடிவ ஜீனோம் அல்லாத DNA இவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A) ஏற்கும் செல் B) பிளாஸ்மிட்

C) கசையிழை D) பைலஸ்.

Circular extra genomic DNA is called

A) Recipient cell B) Plasmid

C) Flagella D) Pilus.

3. ஒரு கி.கி. நிறையுள்ள பந்தின் முடுக்கம் 1 மீ. வி$^{-2}$ அளவை அடையத் தேவையான விசையைக் கணக்கிடுக.

A) 1N B) 2N

C) 3N D) 4N.

What force would be needed to produce an acceleration of 1 ms$^{-2}$ on a ball of mass 1 kg ?

A) 1N B) 2N

C) 3N D) 4N.

4. *X*-கதிரை கண்டறிந்தவர் யார் ?

A) J. J. தாம்சன் B) ஃபாரடே

C) ராண்டஜன் D) ஹென்றி பெக்கொரல்.

*X*-rays were invented by

A) J. J. Thomson B) Faraday

C) Roentgen D) Henry Becquerel.

5. எலக்ட்ரான் ஏற்கும் வினை .................. எனப்படுகிறது.

A) எரிதல் B) சிதைவுறுதல்

C) ஆக்ஸிஜனேற்றம் D) ஒடுக்கம்.

Gain of electron is

A) combustion B) decomposition

C) oxidation D) reduction.

6. **பட்டியல் I** ஐ **பட்டியல் II** உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| a) புரோமின் | 1. கால்சியம் |
| b) சல்பர் | 2. பல அணு கட்டு என்ன் தனிமம் |
| c) வாயுக்கள் | 3. நீர்மம் |
| d) கனிம நீர் | 4. அழுத்தப்படக் கூடியது. |

*குறியீடுகள் :*

| | ***a*** | ***b*** | ***c*** | ***d*** |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 1 | 2 | 4 | 3. |

Match **List I** with **List II** correctly and select your answer using the codes given below :

| | **List I** | | **List II** |
|---|---|---|---|
| a) | Bromine | 1. | Calcium |
| b) | Sulphur | 2. | Polyatomic element |
| c) | Gases | 3. | Liquid |
| d) | Mineral water | 4. | Compressible. |

*Codes :*

| | ***a*** | ***b*** | ***c*** | ***d*** |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 1 | 2 | 4 | 3. |

7. வட்டத்தின் சுற்றளவு

A) $2\pi r$ அலகுகள்
B) $\pi r^2$ சதுர அலகுகள்
C) $\frac{\pi r^2}{4}$ சதுர அலகுகள்
D) $\pi r$ அலகுகள்.

The perimeter of the circle is

A) $2\pi r$ units
B) $\pi r^2$ sq. units
C) $\frac{\pi r^2}{4}$ sq. units
D) $\pi r$ units.

8. 42-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

A) 1947
B) 1950
C) 1963
D) 1976.

The 42nd Constitutional Amendment Act was enacted in the year

A) 1947 B) 1950

C) 1963 D) 1976.

9. சேலம், நாமக்கல், தருமபுரி, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூரில் பாய்கின்ற ஆறு

A) வைகை B) காவிரி

C) தாமிரபரணி D) செய்யாறு.

The river that flows through Salem, Namakkal, Dharmapuri, Nagapattinam and Thanjavur is

A) Vaigai B) Kaveri

C) Thamirabarani D) Cheyyar.

10. முதல் தரெய்ன் போர் நடைபெற்ற ஆண்டு

A) கி. பி. 1194 B) கி. பி. 1191

C) கி. பி. 1193 D) கி. பி. 1195.

The first battle of Tarain took place in the year

A) 1194 A.D. B) 1191 A.D.

C) 1193 A.D. D) 1195 A.D.

11. ஆசாத் ஹிந்த் ஃபாஜ் என்றழைக்கப்படுவது

A) இந்திய தேசிய இராணுவம் B) பிரிட்டிஷ் தேசிய இராணுவம்

C) பாகிஸ்தான் தேசிய இராணுவம் D) பிரெஞ்சு தேசிய இராணுவம்.

Azad Hind Fauj was

A) Indian National Army B) British National Army

C) Pakistan National Army D) French National Army.

12. இந்தியத் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு

A) 1950 B) 1949

C) 1951 D) 1952.

Planning Commission of India was set up in the year

A) 1950 B) 1949

C) 1951 D) 1952.

13. மாநில ஆளுநர் .................. வயதினை நிரம்பியவராய் இருத்தல் வேண்டும்.

A) 30 B) 35

C) 40 D) 45.

The State Governor must have completed .................... years of age.

A) 30 B) 35

C) 40 D) 45.

14. $x^2 + 10x + 21 = 0$ என்ற சமன்பாட்டின் தீர்வுக் கணம்

A) $\{7, 3\}$ B) $\{7, -3\}$

C) $\{-7, 3\}$ D) $\{-7, -3\}$

The solution set of $x^2 + 10x + 21 = 0$ is

A) $\{7, 3\}$ B) $\{7, -3\}$

C) $\{-7, 3\}$ D) $\{-7, -3\}$

15. இந்திய தேர்தல் ஆணையம் .................. உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைப்பு ஆகும்.

A) 1 B) 2

C) 3 D) 4.

The Election Commission of India is a body of .................... members.

A) 1 B) 2

C) 3 D) 4.

16. களப்பிரர்களை விரட்டிய பாண்டிய அரசன்

A) கடுங்கோன் B) சிம்மவிஷ்ணு

C) மாறவர்மன் D) அச்சுதன்.

The Pandiyan king who put an end to the Kalabhra rule is

A) Kadungon B) Simhavishnu

C) Maravarman D) Achuthan.

17. 'நரை முடித்து சொல்லால் முறை செய்த சோழன்'

A) குலோத்துங்கன் B) முதலாம் இராஜேந்திரன்

C) கரிகாலன் D) விஜயாலயன்.

"Narai mudithu sollal murai seidha cholan" is

A) Kulothungan B) Rajendran I

C) Karikalan D) Vijayalayan.

18. இந்தியா விடுதலை பெற்ற 50-வது ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம்

A) மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் B) எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

C) பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் D) ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம்.

The plan launched on the fiftieth year of Independence was

A) Third Five-Year Plan B) Eighth Five-Year Plan

C) Tenth Five-Year Plan D) Ninth Five-Year Plan.

19. இமயமலையின் வடகிழக்கு பகுதி 300 செ.மீ அதிகமாக மழை பெற காரணமாக இருக்கும் கிளை

A) வங்காள விரிகுடா கிளை B) அரபிக்கடல் கிளை

C) காம்பே வளைகுடா கிளை D) கொங்கன் கிளை.

The north-eastern parts of Himalayas receive more than 300 cm rainfall by

A) Bay of Bengal branch B) Arabian sea branch

C) Gulf of Khambhat branch D) Konkan branch.

20. கெண்டை மீனின் உடலில் உள்ள செதில்கள்

A) பிளக்காய்டு B) சைக்ளாய்டு

C) டீனாய்டு D) கானாய்டு.

The name of scales in Mullet fish is

A) Placoid B) Cycloid

C) Ctenoid D) Ganoid.

21. கொல்லப்பட்ட தடுப்பூசிகளுக்கு உதாரணம்

A) காலரா தடுப்பு மருந்து B) BCG தடுப்பு மருந்து

C) DPT தடுப்பு மருந்து D) TT தடுப்பு மருந்து.

Example for killed vaccines is

A) Cholera vaccine B) BCG vaccine

C) DPT vaccine D) TT vaccine.

22. வெர்னியர் அளவியின் மீச்சிற்றளவு

A) 0·01 மி.மீ B) 0·01 செ.மீ

C) 0·1 மீ D) 0·001 செ.மீ.

The least count of vernier callipers is

A) 0·01 mm B) 0·01 cm

C) 0·1 m D) 0·001 cm.

23. வெண்கலத்தின் இயைபு யாது ?

A) காப்பர், வெள்ளீயம்
B) காப்பர், துத்தநாகம்
C) காப்பர், இரும்பு
D) துத்தநாகம், இரும்பு.

What are the constituents of bronze ?

A) Copper and tin
B) Copper and zinc
C) Copper and iron
D) Zinc and iron.

24. $1 + \tan^2 \theta$ இன் மதிப்பு

A) $\cos^2 \theta$
B) $\sec^2 \theta$
C) $\text{cosec}^2 \theta$
D) $\cot^2 \theta$.

The value of $1 + \tan^2 \theta$ is

A) $\cos^2 \theta$
B) $\sec^2 \theta$
C) $\text{cosec}^2 \theta$
D) $\cot^2 \theta$.

25. இந்தியா பின்பற்றும் ஆட்சிமுறை

A) பாராளுமன்ற மக்களாட்சி முறை
B) குடியரசுத்தலைவர் மக்களாட்சி முறை
C) அரச முறை
D) சர்வாதிகார ஆட்சி முறை.

India is following

A) Parliamentary Democracy
B) Presidential Democracy
C) Kingship
D) Dictatorship.

26. முதல் இருப்புப்பாதை 1853-ம் ஆண்டு .................... க்கு இடையில் நிறுவப்பட்டது.

A) டில்லி மற்றும் கல்கத்தா
B) பம்பாய் மற்றும் கல்கத்தா
C) பம்பாய் மற்றும் தானே
D) பம்பாய் மற்றும் சென்னை.

The first railway line was laid between .................. in 1853.

A) Delhi and Calcutta
B) Bombay and Calcutta
C) Bombay and Thane
D) Bombay and Chennai.

27. டேனியர்கள் வணிகத் தலம் அமைத்த இடம்

A) பாண்டிச்சேரி
B) காரைக்கால்
C) தரங்கம்பாடி
D) சென்னை.

The Danish founded a factory at

A) Pondicherry
B) Karaikal
C) Tranquebar
D) Chennai.

28. யாருக்கு எதிராக கிலாபத் இயக்கம் தொடங்கப்பட்டது ?

A) ஆங்கில அரசு
B) இந்துக்கள்
C) முஸ்லீம்கள்
D) கிறித்துவர்கள்.

Khilafat movement was started against the

A) British Government
B) Hindus
C) Muslims
D) Christians.

29. 'குயில்' இதழின் ஆசிரியர்

A) கண்ணதாசன்
B) பாரதியார்
C) சுரதா
D) பாரதிதாசன்.

The author of 'Kuil' magazine was .

A) Kannadasan
B) Bharathiar
C) Suradha
D) Bharathidasan.

30. இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுவது எது ?

A) சென்னை B) மும்பை

C) டெல்லி D) சேலம்.

Which is called the Manchester of India ?

A) Chennai B) Mumbai

C) Delhi D) Salem.

31. 'மின்னனார் வணங்குந் தெய்வம்' என குறிப்பிடப்பட்ட நபர்

A) குசேலர் மனைவி B) அணங்கனார்

C) கண்ணன் மனைவி D) அனுசூயா.

Who was praised as "Minnanar Vanangum Deivam" ?

A) Wife of Kusela B) Ananganar

C) Wife of Krishna D) Anusuya.

32. குதுப்மினாரைக் கட்டத் தொடங்கியவர்

A) இல்டுமிஷ் B) குத்புதீன் ஐபக்

C) ரஸியா D) பால்பன்.

The construction of Qutb-Minar was started by

A) Iltutmish B) Qutb-ub-din-Aibak

C) Razia D) Balban.

33. தமிழ்நாட்டில் பின்வரும் வகையிலான .................. கட்ட கிராம உள்ளாட்சி அரசு செயல்படுகின்றது.

A) ஒன்று B) இரண்டு

C) மூன்று D) நான்கு.

In Tamil Nadu there is a .................. tier system of Rural local government.

A) one B) two

C) three D) four.

34. இந்தியாவில் உள்ள மாநிலங்களில் பரப்பளவின் அடிப்படையில் தமிழ்நாடு .................. இடத்தை வகிக்கிறது.

A) பதினொன்றாவது B) இரண்டாவது

C) மூன்றாவது D) ஏழாவது.

Tamil Nadu is .................. in geographical area among the states of the Indian Union.

A) Eleventh B) Second

C) Third D) Seventh.

35. 2001 ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி, இந்திய மக்கள் தொகை

A) 1·027 பில்லியன் B) 1·037 பில்லியன்

C) 1·047 பில்லியன் D) 1·057 பில்லியன்.

According to 2001 Census, India's population was

A) 1·027 billion B) 1·037 billion

C) 1·047 billion D) 1·057 billion.

36. சமுதாய முன்னேற்றத்தின் விளை நிலம்

A) பள்ளி B) கல்லூரி

C) பல்கலைக் கழகம் D) அலுவலகம்.

The stepping stone for the progress of the society is

A) School B) College

C) University D) Office.

37. ரூ. 5,000 க்கு 5% ஆண்டு வட்டி வீதத்தில் 2 ஆண்டுகளுக்கு தனி வட்டி

A) ரூ. 250 B) ரூ. 500

C) ரூ. 750 D) ரூ. 800.

Simple interest for Rs. 5,000 at the rate of 5% for 2 years is

A) Rs. 250 B) Rs. 500

C) Rs. 750 D) Rs. 800.

38. சூரிய ஒளியின் புறஊதாக் கதிர்களால் ஏற்படும் புற்றுநோய்

A) தோல் புற்றுநோய் B) இரத்த புற்றுநோய்

C) நுரையீரல் புற்றுநோய் D) எலும்பு புற்றுநோய்.

The ultraviolet rays from the sunlight cause

A) skin cancer B) blood cancer

C) lung cancer D) bone cancer.

39. எது தனிக் கனி அல்ல ?

A) நெட்டிலிங்கம் B) பெர்ரி

C) பெப்போ D) ட்ரூப்.

Which is not a simple fruit ?

A) Polyalthia B) Berry

C) Pepo D) Drupe.

40. ஒரு *a.m.u.* என்பது எதற்குச் சமம் ?

A) 139 MeV B) 391 MeV

C) 931 MeV D) 936 MeV.

One *a.m.u.* is equal to

A) 139 MeV B) 391 MeV

C) 931 MeV D) 936 MeV.

41. பட்டியல் **I** ஐ பட்டியல் **II** உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| a) | அயனிப் பிணைப்பு | 1. | $NH_3$, $BF_3$ |
| b) | ஈதல் பிணைப்பு | 2. | 2, 8, 8 |
| c) | $Ca^{2+}$ | 3. | 2, 8 |
| d) | $Mg^{2+}$ | 4. | முனைவுப் பிணைப்பு. |

*குறியீடுகள் :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 4 | 2 | 1 | 3. |

Match **List I** with **List II** correctly and select your answer using the codes given below :

| | List I | | List II |
|---|---|---|---|
| a) | Electrovalent bonding | 1. | $NH_3$, $BF_3$ |
| b) | Co-ordinate bonding | 2. | 2, 8, 8 |
| c) | $Ca^{2+}$ | 3. | 2, 8 |
| d) | $Mg^{2+}$ | 4. | Polar bond. |

*Codes :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 4 | 2 | 1 | 3. |

42. 3 மற்றும் 6 இன் மீ.பொ.வ

A) 1 B) 2

C) 3 D) 6.

The G.C.D. of 3 and 6 is

A) 1 B) 2

C) 3 D) 6.

43. மாவட்ட நீதிபதிகளை .................... நியமிக்கிறார்.

A) ஆளுநர் B) மாவட்ட ஆட்சியாளர்

C) முதலமைச்சர் D) இந்தியக் குடியரசுத் தலைவர்.

The District Judges are appointed by the

A) Governor B) District Collector

C) Chief Minister D) President of India.

44. புவியின் அச்சு .................... சாய்ந்துள்ளது.

A) 90° B) $66\frac{1}{2}^\circ$

C) $23\frac{1}{2}^\circ$ D) 23°

The earth is inclined at an angle of

A) 90° B) $66\frac{1}{2}^\circ$

C) $23\frac{1}{2}^\circ$ D) 23°

45. நகர்வதற்கு உரிய சிறப்பு உறுப்பு இதில் இல்லை

A) யூக்ளினா B) பவளபூச்சி

C) பாரமேஷியம் D) ஹைட்ரா.

Special locomotory organ is absent in

A) Euglena B) Corals

C) Paramecium D) Hydra.

46. நீலகிரி மலையில் உள்ள முக்குருத்தி தேசிய பூங்கா .................. க்கான சரணாலயம் ஆகும்.

A) புலி B) மயில்

C) சிறுத்தை D) சிங்கம்.

Mukkurthi National Park in Nilgiri Hills is the sanctuary for

A) Tiger B) Peacock

C) Leopard D) Lion.

47. 1995 ஆம் ஆண்டு உலகப் பெண்கள் மாநாடு நடந்த இடம்

A) பெய்ஜிங் B) டில்லி

C) லண்டன் D) நியூயார்க்.

In 1995 World Women's Conference was held at

A) Beijing B) Delhi

C) London D) New York.

48. 7, 4, 5, 1, 7, 3, 4, 6, 7 இன் முகடு

A) 7 B) 6

C) 5 D) 4.

The mode of 7, 4, 5, 1, 7, 3, 4, 6, 7 is

A) 7 B) 6

C) 5 D) 4.

49. கருப்பு பருத்தி மண் அதிக அளவில் காணப்படுகின்ற மாவட்டம்

A) சேலம் B) தருமபுரி

C) கோயம்புத்தூர் D) சென்னை.

The black cotton soils are found extensively in the district of

A) Salem B) Dharmapuri

C) Coimbatore D) Chennai.

50. இந்திய ரிசர்வ் வங்கி, வங்கியராகவும், முகவராகவும் செயல்படுவது

A) உலக வங்கிக்காக B) பன்னாட்டு பண நிதிக்காக

C) இந்திய அரசுக்காக D) பன்னாட்டு நிதி கழகத்திற்காக.

Reserve Bank of India acts as the banker and the agent of the

A) World Bank B) International Monetary Fund

C) Government of India D) I.F.C.

51. 'ஆபரேஷன் ஃப்ளிட்' என்ற திட்டம் எதனுடன் தொடர்புடையது ?

A) பால் உற்பத்திப் பெருக்கம் B) நீர்வள மேம்பாடு

C) வெள்ளத்தடுப்பு D) கோழி வளர்ப்பு மேம்பாடு.

The Operation Flood Programme relates to

A) milk production development B) water resources development

C) flood control D) poultry development.

52. ஆண்டிஸ் மலைத்தொடர் அமைந்துள்ள இடம்

A) வட அமெரிக்கா B) ஆசியா

C) தென் அமெரிக்கா D) ஆஸ்திரேலியா.

The Andes mountain range is located in

A) North America B) Asia

C) South America D) Australia.

53. தலா வருமானத்தில் முதலிடம் வகிக்கும் மாநிலம்

A) ஒரிஸா B) பீஹார்

C) பஞ்சாப் D) குஜராத்.

The state which ranks first in per capita income is

A) Orissa B) Bihar

C) Punjab D) Gujarat.

54. இயேசு காவியத்தின் நிகழ்வுகள் நடந்த இடம்

A) ஜெருசலேம் B) சோமாலியா

C) ஜோர்டான் D) சமாரியா.

Incidence of "Yeasu Kaviyam" was held at

A) Jerusalem B) Somalia

C) Jordan D) Samaria.

55. வேலூர் சிப்பாய் கலகம் நடைபெற்ற ஆண்டு

A) கி. பி. 1806 B) கி. பி. 1860

C) கி. பி. 1804 D) கி. பி. 1857.

Vellore Sepoy Mutiny was fought in

A) 1806 A. D. B) 1860 A. D.

C) 1804 A. D. D) 1857 A. D.

56. $y = 4$ என்பதைத் தீர்வாகக் கொண்ட சமன்பாடு

A) $2y + 3 = 0$ B) $y - 7 = 2$

C) $y + 3 = 7$ D) $y + 4 = 0$.

Which equation has $y = 4$ as solution ?

A) $2y + 3 = 0$ B) $y - 7 = 2$

C) $y + 3 = 7$ D) $y + 4 = 0$.

57. ரௌலட் சட்ட எதிர்ப்பு போராட்டத்தில் பஞ்சாபில் கைது செய்யப்பட்ட இரு முக்கிய தலைவர்கள்

A) ஜவஹர்லால் நேரு மற்றும் காந்தி

B) மோதிலால் நேரு மற்றும் C. R. தாஸ்

C) சத்தியபால் மற்றும் சாய்ப்புதீன் கிச்லு

D) திலகர் மற்றும் பிபின் சந்திரபால்.

Two prominent leaders of Punjab were arrested in connection with the *hartal* against Rowlatt Act. They are

A) Jawaharlal Nehru and Gandhi

B) Motilal Nehru and C. R. Das

C) Satyapal and Saifuddin Kichloo

D) Tilak and Bipin Chandra Pal.

58. .................. நதிக்கரையில் அதிக அளவில் சணல் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

A) கோசி B) ஹூக்ளி

C) தபதி D) சிந்து.

Large number of jute mills are found on the banks of the .................. river.

A) Kosi B) Hooghly

C) Tapti D) Indus.

59. சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை தோற்றுவித்தவர்

A) பெரியார் B) வள்ளலார்

C) டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி D) T. M. நாயர்.

The Samarasa Suttha Sanmarga Sangam was founded by

A) Periyar B) Vallalar

C) Dr. Muthulakshmi Reddy D) T. M. Nair.

60. இராஜ்ய சபா உறுப்பினர்களின் பதவிக் காலம்

A) நான்கு ஆண்டுகள் B) மூன்று ஆண்டுகள்

C) ஐந்து ஆண்டுகள் D) ஆறு ஆண்டுகள்.

Rajya Sabha members are elected for a period of

A) four years B) three years

C) five years D) six years.

61. குப்தர்களின் உலகப் புகழ்பெற்ற சுவர் ஓவியங்கள் காணப்படும் இடம்

A) கயா B) மதுரா

C) அஜந்தா D) சாரநாத்.

The world famous wall paintings of the Guptas are found at

A) Gaya B) Mathura

C) Ajanta D) Sarnath.

62. 7 செ.மீ ஆரமும் 24 செ.மீ உயரமும் கொண்ட கூம்பின் கன அளவு

A) 168 செ.மீ $^3$ B) 1176 $\pi$ செ.மீ $^3$

C) 392 $\pi$ செ.மீ $^3$ D) 784 $\pi$ செ.மீ $^3$.

The volume of a cone with radius 7 cm and height 24 cm is

A) 168 $cm^3$ B) 1176 $\pi$ $cm^3$

C) 392 $\pi$ $cm^3$ D) 784 $\pi$ $cm^3$.

63. முன் வேதகாலத்தைப் பற்றி அறிய உதவுவது

A) இதிகாசங்கள் B) உபநிடதங்கள்

C) ரிக்வேதம் D) ஆரண்யங்கள்.

The early Vedic period is known from

A) the Epics B) the Upanishads

C) the Rig Veda D) the Aranyakas.

64. பின்வரும் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் :

முதுமொழிக் _காஞ்சி_

A) ஊர்　　B) ஆறு

C) மலை　　D) அணிகலன்.

Find the meaning of the underlined word :

Mudhu Mozhi _Kanchi_

A) Town　　B) River

C) Mountain　　D) Jewel.

65. கரீபீ ஹட்டா என்பதன் பொருள்

A) வேலையின்மை　　B) வறுமை அகற்றல்

C) பசுமைப் புரட்சி　　D) சேவைகள்.

'Garibi Hatao' means

A) unemployment　　B) removal of poverty

C) green revolution　　D) services.

66. ஆறு மாதத்திற்கு மேலாக உள்ள காசோலை பின்வருமாறு அழைக்கப்படுகிறது

A) காலக்கெடு முடிந்த காசோலை　　B) பின்தேதியிட்ட காசோலை

C) சாதாரண காசோலை　　D) கீறலிட்ட காசோலை.

A cheque in circulation for more than six months is called

A) stale cheque　　B) post-dated cheque

C) ordinary cheque　　D) crossed cheque.

67. கனிஷ்கர் காலத்தில் புத்தமதம்

A) இரண்டாகப் பிரிந்தது　　B) மூன்றாகப் பிரிந்தது

C) ஐந்தாகப் பிரிந்தது　　D) நான்காகப் பிரிந்தது.

During the period of Kaniskha, Buddhism had split into

A) two branches B) three branches

C) five branches D) four branches.

68. இரு எண்களின் கூடுதல் 60. அவற்றின் வித்தியாசம் 8 எனில் அந்த எண்கள்

A) 32, 28 B) 33, 27

C) 35, 25 D) 34, 26.

The sum of two numbers is 60 and their difference is 8. The numbers are

A) 32, 28 B) 33, 27

C) 35, 25 D) 34, 26.

69. வரதட்சணை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

A) 1961 B) 1960

C) 1962 D) 1963.

Dowry Prohibition Act was passed in the year

A) 1961 B) 1960

C) 1962 D) 1963.

70. கடலோரங்களில் உடைந்து சிதறுகிற அலை எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A) அலைகள் B) வெள்ளைத் தொப்பிகள்

C) நுரைதிரள் D) அலை அரிமேடை.

The breaking waves are called

A) waves B) white caps

C) surf D) wave cut platform.

71. இன்சுலின் என்பது

A) மனித வளர்ச்சி பொருள் B) சிகிச்சைக்கான பொருள்

C) தடுப்பூசி D) கரிம அமிலம்.

Insulin is a/an

A) human growth hormone B) therapeutic product

C) vaccine D) organic acid.

72. மனிதன் அறிந்த முதல் உலோகம்

A) தங்கம் B) தாமிரம்

C) இரும்பு D) வெள்ளி.

The first known metal to man is

A) Gold B) Copper

C) Iron D) Silver.

73. மனிதனில் இரத்தச் சிவப்பணுக்கள் உருவாகும் இடம்

A) தசை B) மண்ணீரல்

C) எலும்பு மஜ்ஜை D) தோல்.

Formation of red blood cells in a normal human adult occurs in

A) muscle B) spleen

C) bone marrow D) skin.

74. வெள்ளியின் உருகுநிலை

A) 327° C B) 80° C

C) 961° C D) 1083° C.

The melting point of silver is

A) 327° C B) 80° C

C) 961° C D) 1083° C.

75. 18 காரட்டில் உள்ள தங்கத்தின் எடை சதவீதம்

A) 91·6 B) 75

C) 100 D) 94.

18 ct contains .................. % weight of gold.

A) 91·6 B) 75

C) 100 D) 94.

76. 512 ன் கன மூலம்

A) 18 B) 8

C) 6 D) 16.

The cube root of 512 is

A) 18 B) 8

C) 6 D) 16.

77. இந்தியாவின் முதல் குடியரசு தலைவர்

A) டாக்டர். இராஜேந்திர பிரசாத் B) டாக்டர். இராதாகிருஷ்ணன்

C) வி. வி. கிரி D) கியானி ஜெயில் சிங்.

The First President of India was

A) Dr. Rajendra Prasad B) Dr. S. Radhakrishnan

C) V. V. Giri D) Giani Zail Singh.

78. ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய நோக்கம்

A) பெரும் போராட்டங்கள் B) கடையடைப்பு

C) வரி செலுத்த மறுத்தல் D) சுயராஜ்யம் பெறுவது.

The main aim of non-co-operation movement was

A) large scale demonstrations B) Hartal

C) non-payment of taxes D) to attain Swaraj.

79. பாக்சைட் .................. ன் கச்சாப் பொருளாகும்.

A) அலுமினியம் B) இரும்பு

C) தாமிரம் D) மைக்கா.

Bauxite is an ore of

A) Aluminium B) Iron

C) Copper D) Mica.

80. பன்னாட்டு வர்த்தக அமைப்பின் தலைமையகம் எங்குள்ளது ?

A) நியூயார்க் B) ஜெனீவா

C) லண்டன் D) வார்ஸா.

The headquarters of World Trade Organisation is at

A) New York B) Geneva

C) London D) Warsaw.

81. 2010 ல் தமிழ்நாட்டில் மொத்தம் .................. மாவட்டங்கள் உள்ளன.

A) 30 B) 35

C) 32 D) 36.

The total number of districts of Tamil Nadu in 2010 is

A) 30 B) 35

C) 32 D) 36.

82. 96-வது இந்திய அறிவியல் மாநாடு நடைபெற்ற இடம்

A) பெங்களூர் B) ஹைதராபாத்

C) புதுடெல்லி D) ஷில்லாங்.

96th Indian Science Congress was held in

A) Bangalore B) Hyderabad

C) New Delhi D) Shillong.

83. சந்திராயன்-I என்ற செயற்கைகோள் சந்திரனில் வெற்றிகரமாக ஏவப்பட்ட ஆண்டு

A) 2008 B) 2007

C) 2009 D) 2010.

Chandrayaan-I was successfully launched in the year

A) 2008 B) 2007

C) 2009 D) 2010.

84. எய்ட்ஸ் நோயை உறுதிப்படுத்தும் சோதனை

A) $X$-கதிர் B) திசு ஆய்வு

C) வெஸ்டர்ன்பிளாட் சோதனை D) எலிசா.

The confirmatory test for AIDS is

A) $X$-ray B) Biopsy

C) Western blot D) ELISA.

85. மிகத்துல்லியமாக வரைபடங்களை பெரிதாக்கவும் சிறியதாக்கவும் உதவும் சாதனம்

A) சோனோகிராப் B) பேன்டோகிராப்

C) ஸ்பெக்ட்ரோகிராப் D) தெர்மோகிராப்.

An instrument used for enlargement and reduction of maps with accuracy is

A) Sonograph B) Pantograph

C) Spectrograph D) Thermograph.

86. பட்டியல் **I** ஐ பட்டியல் **II** உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| a) | விஸ்வநாதன் ஆனந்த் | 1. | அஸ்ட்ரோ பௌதிகம் |
| b) | சானியா மிர்ஸா | 2. | செஸ் |
| c) | எஸ். சந்திரசேகர் | 3. | டென்னிஸ் |
| d) | கார்பா நடனம் | 4. | பஞ்சாப். |

*குறியீடுகள் :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 3 | 1 | 2 | 4. |

Match **List I** with **List II** correctly and select your answer using the codes given below :

| | List I | | List II |
|---|---|---|---|
| a) | Viswanathan Anand | 1. | Astrophysics |
| b) | Sania Mirza | 2. | Chess |
| c) | S. Chandrasekhar | 3. | Tennis |
| d) | Garba dance | 4. | Punjab. |

*Codes :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 3 | 1 | 2 | 4. |

87. ஜூன் 28, 2010 ஆம் ஆண்டு இந்தியா .................. நாட்டுடன் சிவில் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டது.

A) கனடா B) அமெரிக்கா

C) ஈரான் D) குரோஸியா.

On June 28, 2010 India signed a civil nuclear agreement with

A) Canada B) America

C) Iran D) Croatia.

88. ஜூன் 22, 2010 ல் இந்திய விமானப்படை கௌரவ பதவிக்காக பரிந்துரைத்த கிரிக்கெட் வீரர்

A) சச்சின் டெண்டுல்கர் B) M. S. தோனி

C) ஸ்ரீகாந்த் D) கபில்தேவ்.

IAF proposed honorary post for the cricketer on June 22, 2010 which was conferred on

A) Sachin Tendulkar B) M. S. Dhoni

C) Srikant D) Kapil Dev.

89. 11-வது ஐந்தாண்டு திட்ட காலம்

A) 2006 — 2011 B) 2007 — 2012

C) 2008 — 2013 D) 2005 — 2010.

The 11th Five-Year Plan period is

A) 2006 — 2011 B) 2007 — 2012

C) 2008 — 2013 D) 2005 — 2010.

90. இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு தினம் எது ?

A) பிப்ரவரி, 9 B) ஜனவரி, 9

C) மார்ச், 9 D) ஏப்ரல், 9.

Which day is called as the Indian Census Day ?

A) 9th February B) 9th January

C) 9th March D) 9th April.

91. 'ஸ்லம் டாக் மில்லியனர்' என்ற திரைப்படத்திற்காக இரண்டு ஆஸ்கார் விருதுகளைப் பெற்றவர்

A) குல்சார் B) பானு அதையா

C) சத்யஜித்ரே D) ஏ. ஆர். ரஹ்மான்.

Who bagged two Oscar awards for the film 'Slumdog Millionaire' ?

A) Gulzar B) Bhanu Athaiya

C) Satyajit Ray D) A. R. Rehman.

92. 2009 ம் ஆண்டின் சமூகப் பணிக்காக பத்ம பூஷன் விருது பெற்றவர்

A) V. P. தனஞ்செயன் B) சரோஜினி வரதப்பன்

C) D. ஜெயகாந்தன் D) G. சிவராம கிருஷ்ணமூர்த்தி.

Who received the Padma Bhushan award for social work in 2009 ?

A) V. P. Dhananjayan B) Sarojini Varadappan

C) D. Jayakanthan D) G. Sivarama Krishnamurthy.

93. 2002-2007 ல் இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்தவர்

A) A.P.J. அப்துல் கலாம் B) K. R. நாராயணன்

C) R. வெங்கட்ராமன் D) B. D. ஜாட்டி.

Who was the President of India during the year 2002-2007 ?

A) A. P. J. Abdul Kalam B) K. R. Narayanan

C) R. Venkataraman D) B. D. Jatti.

94. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

A) 2007 B) 2009

C) 2010 D) 2008.

Mahatma Gandhi National Rural Employment Scheme was introduced in the year

A) 2007 B) 2009

C) 2010 D) 2008.

95. இந்தியாவின் முதல் முழு கல்வியறிவு பெற்ற மாவட்டம்

A) நெல்லூர், ஆந்திர பிரதேசம் B) எர்ணாகுளம், கேரளா

C) கோலார், கர்நாடகா D) காஞ்சீபுரம், தமிழ்நாடு.

The first totally literate district in India is

A) Nellore in Andhra Pradesh B) Ernakulam in Kerala

C) Kolar in Karnataka D) Kancheepuram in Tamil Nadu.

96. அமெரிக்க விண்கலம் கொலம்பியாவில் பயணம் செய்த முதல் இந்தியப் பெண்

A) இந்திரா நூயி B) சானியா மிர்ஷா

C) கல்பனா சாவ்லா D) பிரதீபா பாட்டீல்.

The first Indian woman who travelled in American space shuttle, Columbia was

A) Indira Nooyi B) Sania Mirza

C) Kalpana Chawla D) Pratibha Patel.

97. தமிழ்நாட்டின் முதல் பெண் காவல்துறைத் தலைவர்

A) திலகவதி B) லத்திகா சரண்

C) அருணா D) கிரண்பேடி.

The first woman DGP in Tamil Nadu is

A) Thilagavathy B) Lathika Saran

C) Aruna D) Kiran Bedi.

98. வாணிபத்தில் உலகில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ள இந்தியப் பெண்

A) மீரர் குமார் B) பாத்திமா பீபி

C) பிரதீபா பாட்டீல் D) இந்திரா நூயி.

World's fifth most powerful Indian woman in business is

A) Meira Kumar B) Fathima Bibi

C) Pratibha Patel D) Indira Nooyi.

99. 20 வது காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாடு நடைபெற்ற இடம்

A) புது டெல்லி B) மும்பை

C) சென்னை D) திருவனந்தபுரம்.

20th Commonwealth Speakers Conference was held at

A) New Delhi B) Mumbai

C) Chennai D) Thiruvananthapuram.

100. ஐ. நா. வின் கொடியில் எம்மரத்தின் கிளைகள் இடம் பெற்றுள்ளன ?

A) யூக்கலிப்டஸ் B) ஆலிவ்

C) மேப்பிள் D) பார்லி.

Branches of which tree appear on the UN flag ?

A) Eucalyptus B) Olive

C) Maple D) Barley.

101. **பட்டியல் I** ல் உள்ள நூல்களை **பட்டியல் II**-ல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| *நூல்* | *நூலாசிரியர்* |
| 1. நாரைவிடுதூது | அ. நல்லாதனார் |
| 2. திரிகடுகம் | ஆ. செயங்கொண்டார் |
| 3. சீறாப்புராணம் | இ. சத்திமுத்தப்புலவர் |
| 4. கலிங்கத்துப் பரணி | ஈ. உமறுப்புலவர். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஆ | அ | ஈ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | இ | அ | ஈ | ஆ |
| D) | ஈ | இ | ஆ | அ. |

102. **பட்டியல் I** ல் உள்ள சொற்களை **பட்டியல் II**-ல் உள்ள சொற்பொருளறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| *சொல்* | *பொருள்* |
| 1. கொண்டல் | அ. இரவு |
| 2. வளி | ஆ. கார்முகில் |
| 3. அல் | இ. பெருஞ்செல்வம் |
| 4. ஆக்கம் | ஈ. காற்று. |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | ஆ | இ | அ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | ஆ | ஈ | இ | அ |
| D) | அ | இ | ஈ | ஆ. |

103. **பட்டியல் I** ல் உள்ள சொற்களை **பட்டியல் II**-ல் உள்ள சொற்பொருளறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | | **பட்டியல் II** | |
|---|---|---|---|
| | *சொல்* | | *பொருள்* |
| 1. | குருசு | அ. | முடிவு |
| 2. | ஒடுக்கம் | ஆ. | வியப்பு |
| 3. | முழவு | இ. | சிலுவை |
| 4. | இறும்பூது | ஈ. | மத்தளம். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | ஆ | அ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | இ | ஆ | ஈ | அ |
| D) | இ | அ | ஈ | ஆ. |

104. **பட்டியல் I** ல் உள்ள சொற்களை **பட்டியல் II**-ல் உள்ள சொற்பொருளறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | | **பட்டியல் II** | |
|---|---|---|---|
| | *சொல்* | | *பொருள்* |
| 1. | மதுகரம் | அ. | குற்றம் |
| 2. | துன்று | ஆ. | தேனீ |
| 3. | புரை | இ. | பேய் |
| 4. | அலகை | ஈ. | செறிவு. |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | ஈ | அ | இ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | இ | ஆ | ஈ | அ |
| D) | அ | இ | ஈ | ஆ. |

105. **பட்டியல் I** ல் உள்ள நூல்களை **பட்டியல் II**-ல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | | **பட்டியல் II** | |
|---|---|---|---|
| | *நூல்* | | *நூலாசிரியர்* |
| 1. | குற்றாலக் குறவஞ்சி | அ. | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| 2. | மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் | ஆ. | அண்ணாமலை ரெட்டியார் |
| 3. | காவடிச் சிந்து | இ. | திரிகூட ராசப்பக் கவிராயர் |
| 4. | நந்திக்கலம்பகம் | ஈ. | குமரகுருபரர். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஈ | ஆ | இ |
| B) | ஈ | அ | இ | ஆ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | இ | ஈ | ஆ | அ. |

106. **பட்டியல் I** ல் உள்ள நூல்களை **பட்டியல் II**-ல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | | **பட்டியல் II** | |
|---|---|---|---|
| | *நூல்* | | *நூலாசிரியர்* |
| 1. | திருவாய்மொழி | அ. | வேதநாயகம் பிள்ளை |
| 2. | குண்டலகேசி | ஆ. | இராமலிங்க அடிகள் |
| 3. | திருவருட்பா | இ. | நம்மாழ்வார். |
| 4. | பிரதாப முதலியார் சரித்திரம் | ஈ. | நாதகுத்தனார். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | அ | இ | ஈ |
| B) | அ | ஆ | ஈ | இ |
| C) | ஈ | இ | அ | ஆ |
| D) | இ | ஈ | ஆ | அ. |

107. 'நெடுந்தொகை' எனப் போற்றப்படும் நூல்

A) புறநானூறு
B) அகநானூறு
C) திருமுருகாற்றுப்படை
D) கலித்தொகை.

108. 'வேளாண்வேதம்' எனக் குறிக்கப்பெறும் நூல்

A) ஏலாதி
B) சிறுபஞ்சமூலம்
C) நாலடியார்
D) கார்நாற்பது.

109. 'முத்தமிழ்க் காவலர்' என அழைக்கப்பட்டவர்

A) கி. ஆ. பெ. விசுவநாதன்
B) அறிஞர் அண்ணா
C) கலைஞர் கருணாநிதி
D) மு. வ.

110. 'கவிமணி' என்ற சொல்லால் போற்றப்பெறும் சான்றோர்

A) வேதநாயகம் பிள்ளை
B) தேசிக விநாயகம் பிள்ளை
C) இராமலிங்கம் பிள்ளை
D) முடியரசன்.

111. 'அப்பரடிகள்' என்று அழைக்கப்படுபவர்

A) சுந்தரர்
B) மாணிக்கவாசகர்
C) நம்மாழ்வார்
D) திருநாவுக்கரசர்.

112. பிரித்து எழுதுக : புறநானூறு

A) புற + நான்கு + நூறு
B) புறம் + நான்கு + நூறு
C) புறநான்கு + நூறு
D) புற + நானூறு.

113. பிரித்து எழுதுக : கிழங்கையகழ்ந்தெடுக்கும்

A) கிழங்கை + அகழ்ந்தெடுக்கும்
B) கிழங்கு + அகழ்ந்து + எடுக்கும்
C) கிழங்கை + அகழ்ந்து + எடுக்கும்
D) கிழங்ககழ்ந்து + எடுக்கும்.

114. பிரித்து எழுதுக : தனித்தமிழ்

A) தனித்து + அமிழ்
B) தனி + தமிழ்
C) த + அனித்தமிழ்
D) தனித்த + தமிழ்.

115. பிரித்து எழுதுக : நிற்பதொன்றில்

A) நிற்பது + ஒன்று + இல்
B) நிற்ப + தொன்றில்
C) நிற்பதொன்று + இல்
D) நிற்பது + ஒன்றில்.

116. எதிர்ச்சொல் தருக : வெகுளி

A) மகிழ்ச்சி
B) அவலம்
C) அச்சம்
D) துயரம்.

117. எதிர்ச்சொல் தருக : நல்வினை

A) தீயவை
B) தீது
C) தீவினை
D) நலமின்மை.

118. எதிர்ச்சொல் தருக : அகம்

A) புரம்
B) மரம்
C) புறம்
D) முடி.

119. எதிர்ச்சொல் தருக : அண்மை

A) சேய்மை
B) அருகில்
C) நெருக்கம்
D) பக்கத்தில்.

120. எதிர்ச்சொல் தருக : பெருமை

A) பொறுமை
B) வறுமை
C) சிறுமை
D) இன்மை.

121. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) சிந்தாமணி.
B) சிலப்பதிகாரம்
C) பாஞ்சாலி சபதம்
D) மணிமேகலை.

122. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) சேரன்
B) இளங்கோவடிகள்
C) சோழன்
D) பாண்டியன்.

123. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) வெட்சி
B) கரந்தை
C) பாலை
D) நொச்சி.

124. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) வாழ்க
B) வீழ்க
C) வெல்க
D) நடந்த.

125. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) ஐயம் B) பூமி

C) புவி D) உலகம்.

126. ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்குக :

A) அரசன் பரிசில் வழங்கினார்கள் B) அரசன் பரிசில் வழங்கினான்

C) அரசர்கள் பரிசில் வழங்கியது D) அரசர்கள் பரிசில் வழங்கினான்.

127. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க :

A) தமிழில் முதன்முதலாக சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாகத் தோன்றின

B) தமிழில் முதன்முதலாகச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாக தோன்றின

C) தமிழில் முதன்முதலாகச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாகத் தோன்றின

D) தமிழில் முதன்முதலாக சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாக தோன்றின.

128. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க :

A) அவனுக்கு சென்ட்ரல் கவர்ன்மெண்டில் பணி கிடைத்தது

B) அவனுக்கு மத்திய அரசில் உத்தியோகம் கிடைத்தது

C) அவனுக்கு நடுவண் அரசில் பணி கிடைத்தது

D) அவனுக்கு நடுவண் அரசில் உத்தியோகம் கிடைத்தது.

129. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க :

A) பிரதமரின் டி.வி. பேட்டி நாளை வரும்

B) பிரதமரின் தொலைக்காட்சிப் பேட்டி நாளை வரும்

C) பிரதமரின் டி. வி. நேர்காணல் நாளை வரும்

D) பிரதமரின் தொலைக்காட்சி நேர்காணல் நாளை வரும்.

130. வழூஉச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க :

A) பூமாலையைப் படத்தின் அருகாமையில் வை

B) பூமாலையைப் படத்தின் அருகில் வை

C) பூச்சரத்தை படத்தின் அருகாமையில் வை

D) பூவினை படத்தின் அருகாமையில் வை.

131. Court : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க.

A) நகரமன்றம் B) பாராளுமன்றம்

C) நீதிமன்றம் D) சட்டமன்றம்.

132. Complete : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க.

A) முழுமை B) பழமை

C) முதுமை D) இளமை.

133. Empty vessel : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க.

A) வெற்றுப் பாத்திரம் B) செம்புப் பாத்திரம்

C) வெள்ளிப் பாத்திரம் D) நீர் நிரம்பிய பாத்திரம்.

134. Publication : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க.

A) நூலகம் B) பதிப்பகம்

C) வெளியீடு D) பொதுவிடம்.

135. Powerful : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க.

A) சக்தியற்ற B) வலியற்ற

C) சக்திவாய்ந்த D) வீரமற்ற.

136. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | *பணி* | *பனி* |
|---|---|---|
| A) | நாளை | மார்கழி |
| B) | மாலை | பனிக்கட்டி |
| C) | காலை | தொழில் |
| D) | வேலை | குளிர். |

137. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | *என்* | *எண்* |
|---|---|---|
| A) | புவி | விண்மீன் |
| B) | ஆமை | வெப்பம் |
| C) | என்னுடைய | எண்ணிக்கை |
| D) | பார் | நீர். |

138. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | உறு | உரு |
|---|---|---|
| A) | மிகுதி | வடிவம் |
| B) | தகுதி | படிவம் |
| C) | விகுதி | கடினம் |
| D) | பகுதி | நளினம். |

139. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | அளகு | அலகு |
|---|---|---|
| A) | சேவல் | பக்கம் |
| B) | குரங்கு | நீளம் |
| C) | காட்டுக்கோழி | அளவைக்கூறு |
| D) | அகலம் | சோலை. |

140. 'நகைத்தல்' — இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

A) நகை B) நகைய

C) நகா D) நகையா.

141. 'புதைந்து' — இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

A) புதை B) புதையல்

C) புதுதல் D) புதையும்.

142. 'ஏத்தி' — இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

A) ஏத்திய B) ஏத்த

C) ஏத்தா D) ஏத்து.

143. 'தருக' — இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

A) தரு B) தா

C) தந்து D) த.

144. 'தழால்' — இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

A) தழுவி B) தழு

C) தழுவா D) தழீ.

145. 'பூ' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) நிலவு B) வானம்

C) உலகம் D) நீர்.

146. 'ஏ' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) வில் B) வேல்

C) கேடயம் D) அம்பு.

147. 'ஞா' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) பொருந்து B) மருந்து

C) விருந்து D) நடந்து.

148. 'பா' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) பாடல் B) ஆடல்

C) நாடல் D) தேடல்.

149. 'ம' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) இந்திரன் B) பீமன்

C) இயமன் D) நகுலன்.

150. 'உணர்' — என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை தேர்ந்தெடுக்க.

A) உணர்ச்சி B) உணர்வான்

C) உண்பான் D) உண்ட.

151. 'படி' — என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை தேர்ந்தெடுக்க.

A) படித்த B) படித்தல்

C) படிக்க D) படித்தான்.

152. 'வாழ்' — என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.

A) வாழ்ந்து B) வாழாதார்

C) வாழ்ந்த D) வாழ்தல்.

153. 'ஆற்று' — என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.

A) ஆற்றிய B) ஆற்றும்

C) ஆற்றுதல் D) ஆற்றாரும்.

154. 'வெல்' — என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க.

A) வெல்லல்

B) வென்ற

C) வென்று

D) வெல்லும்.

155. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) ஓசை, ஐவர், எருது, அன்பு

B) அன்பு, எருது, ஐவர், ஓசை

C) எருது, ஓசை, அன்பு, ஐவர்

D) ஐவர், அன்பு, ஓசை, எருது.

156. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) வசை, வழக்கு, வாழ்வு, வானம்

B) வழக்கு, வசை, வானம், வாழ்வு

C) வாழ்வு, வழக்கு, வானம், வசை

D) வானம், வசை, வாழ்வு, வழக்கு.

157. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) எட்டு, எருது, எழில், ஏணி

B) எருது, எழில், எட்டு, ஏணி

C) எழில், எட்டு, ஏணி, எருது

D) ஏணி, எருது, எழில், எட்டு.

158. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) முரசு, மலை, மூங்கில், மீதி

B) மீதி, மலை, முரசு, மூங்கில்

C) மலை, முரசு, மூங்கில், மீதி

D) மலை, மீதி, முரசு, மூங்கில்.

159. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) ஔவை, ஓடம், ஒட்டகம், ஐந்து

B) ஓடம், ஔவை, ஐந்து, ஒட்டகம்

C) ஐந்து, ஒட்டகம், ஓடம், ஔவை

D) ஒட்டகம், ஓடம், ஔவை, ஐந்து.

160. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) வகுத்துப் பாடுவது பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியம் பத்துப் பருவங்களாக

B) இலக்கியம் பிள்ளைத்தமிழ் என்னும் பத்துப் பருவங்களாக வகுத்துப்பாடுவது

C) பத்துப் பருவங்களாக வகுத்துப்பாடுவது பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கியம்

D) பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியம் வகுத்துப் பாடுவது பத்துப் பருவங்களாக.

161. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) வேண்டும் சிந்தனை தமிழ் மொழியில் சிறக்க

B) சிந்தனை மொழியில் தமிழ் சிறக்க வேண்டும்

C) மொழியில் தமிழ் சிறக்க வேண்டும் சிந்தனை

D) தமிழ் மொழியில் சிந்தனை சிறக்க வேண்டும்.

162. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) பரணியைக் கலிங்கத்துப் பாடியவர் செயங்கொண்டார்

B) கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் செயங்கொண்டார்

C) பாடியவர் செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியை

D) கலிங்கத்துப் பரணியைச் செயங்கொண்டார் பாடியவர்.

163. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) வளமான வாழ்க்கைக்கு ஆதாரமாகும் நிலத்தடி நீர்

B) வாழ்க்கைக்கு நிலத்தடி நீர் வளமான ஆதாரமாகும்

C) நிலத்தடி நீர் வளமான வாழ்கைக்கு ஆதாரமாகும்

D) ஆதாரமாகும் வாழ்க்கைக்கு வளமான நிலத்தடி நீர்.

164. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) மழை பெய்வதற்கு முக்கிய காரணிகள் மரம் செடி கொடிகள்

B) முக்கிய காரணிகள் மரம் செடி கொடிகள் மழை பெய்வதற்கு

C) மரம் செடி கொடிகள் மழை பெய்வதற்கு முக்கிய காரணிகள்

D) மழை பெய்வதற்கு மரம் செடி கொடிகள் முக்கிய காரணிகள்.

165. 'அகலம்' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) பொருட்பெயர

B) பண்புப்பெயர்

C) சினைப்பெயர்

D) இடப்பெயர்.

166. 'புளிப்பு' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) பொருட்பெயர் B) இடப்பெயர்

C) காலப்பெயர் D) பண்புப்பெயர்.

167. 'பந்து' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) காலப்பெயர் B) பொருட்பெயர்

C) சினைப்பெயர் D) இடப்பெயர்.

168. 'புத்தகம்' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) காலப்பெயர் B) தொழிற்பெயர்

C) பண்புப்பெயர் D) பொருட்பெயர்.

169. 'ஆண்டு' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) பொருட்பெயர் B) காலப்பெயர்

C) சினைப்பெயர் D) தொழிற்பெயர்.

170. 'கெழீஇய' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) வேற்றுமைத்தொடர் B) வினையெச்சத்தொடர்

C) சொல்லிசையளபெடை D) பண்புப்பெயர்.

171. 'தடங்கண்' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) உரிச்சொற்றொடர் B) உருவகம்

C) வினைத்தொகை D) அடுக்குத்தொடர்.

172. 'செடி கொடிகள்' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) உம்மைத்தொகை B) அடுக்குத்தொடர்

C) எண்ணும்மை D) இரட்டைக்கிளவி.

173. 'மாநிதி' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) உரிச்சொற்றொடர் B) தொழிற்பெயர்

C) உவமைத்தொடர் D) வேற்றுமைத்தொடர்.

174. 'மென்மேலும்' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) இரட்டைக்கிளவி B) அடுக்குத்தொடர்

C) விளித்தொடர் D) உவமைத்தொடர்.

175. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

'இல்வாழ்க்கை வளர்பிறை போல் வளர வேண்டும்'

A) இல்வாழ்க்கை வளர்வது எதனால் ?

B) வளர்பிறை போல் உயர்வது எது ?

C) இல்வாழ்க்கை வளரக் காரணம் என்ன ?

D) இல்வாழ்க்கை எவ்வாறு வளர வேண்டும் ?

176. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

'கலிங்கத்துப்பரணி' முதற் குலோத்துங்க சோழனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது !

A) 'கலிங்கத்துப்பரணி' யாரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது ?

B) கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் யார் ?

C) முதல் குலோத்துங்க சோழனைப் பாடிய நூல் எது ?

D) கலிங்கத்துப்பரணி சிற்றிலக்கியமா ?

177. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

'இளமை கல்விக்குரியது'

A) இளமையில் என்ன செய்ய வேண்டும் ?

B) கல்வியை எப்பருவத்தில் கற்க வேண்டும் ?

C) இளமை எதற்குரியது ?

D) கல்வி கற்கும் பருவம் யாது ?

178. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

'ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழிநிலையைப் பொறுத்தே அமையும்'

A) நாடு முன்னேற்றம் அடையக் காரணமென்ன ?

B) ஒரு நாட்டின் முன்னேற்றம் எதைப் பொறுத்து அமையும் ?

C) நாடு எவ்வாறு இருக்க வேண்டும் ?

D) நாட்டின் முன்னேற்றத்திற்கு மொழி அவசியமா ?

179. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

'ஔவையார் ஆத்திச்சூடி பாடினார்'

A) ஔவையார் எதனைப் பாடினார் ?

B) ஆத்திச்சூடியைப் பாடியவர் யார் ?

C) ஔவையார் பாடிய நூல்கள் யாவை ?

D) ஔவையார் ஆத்திச்சூடியைப் பாடினாரா ?

180. 'அனந்தனுக்குக் காது ஏது' – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) உணர்ச்சி வாக்கியம் B) வினா வாக்கியம்

C) தொடர் வாக்கியம் D) தனி வாக்கியம்.

181. 'உழவன் நிலத்தை உழுது, விதை விதைத்து, நீர் பாய்ச்சி, உரமிட்டு அறுவடை செய்தான்' – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) தொடர் வாக்கியம் B) கலவை வாக்கியம்

C) தனி வாக்கியம் D) செய்தி வாக்கியம்.

182. 'நான் இலக்கணம் படித்தேன்' – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) செய்தி வாக்கியம் B) கலவை வாக்கியம்

C) எதிர்மறை வாக்கியம் D) உடன்பாட்டு வாக்கியம்.

183. 'பாரதிக்கு பாரத நாட்டின் மேல் மிகுந்த பற்று' – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) செய்தி வாக்கியம் B) கலவை வாக்கியம்

C) உணர்ச்சி வாக்கியம் D) வினா வாக்கியம்.

184. 'பாண்டியர்கள் முத்தமிழ் வளர்த்தனர்' — எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) செயப்பாட்டுவினை வாக்கியம் B) செய்வினை வாக்கியம்

C) உணர்ச்சி வாக்கியம் D) தனி வாக்கியம்.

185. செய்வினைச் சொற்றொடரைக் கண்டறிக.

A) கந்தன் மரம் வெட்டினான் B) கந்தன் மரம் வெட்டுவித்தான்

C) கந்தன் மரம் வெட்டியது D) மரம் கந்தனால் வெட்டப்பட்டது.

186. செய்வினைச் சொற்றொடரைக் கண்டறிக.

A) சேமித்தனர் மக்கள் மழைநீரை B) மக்களால் மழைநீர் சேமிக்கப்பட்டது

C) மழைநீரை மக்கள் சேமித்தனர் D) மக்கள் சேமித்தனர் மழைநீரை.

187. செயப்பாட்டுவினை சொற்றொடரைக் கண்டறிக.

A) இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்

B) சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்றினார்

C) இயற்றினார் சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள்

D) இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டது.

188. பிறவினைத் தொடரைக் கண்டறிக.

A) மாதவி நடனம் கற்றாள் B) நடனம் மாதவி கற்றாள்

C) கற்றாள் நடனம் மாதவி D) மாதவி நடனம் கற்பித்தாள்.

189. தன்வினை வாக்கியத்தை கண்டறிக.

A) புதியதோர் உலகம் செய்விப்போம்
B) உலகம் புதியதோர் செய்வோம்
C) செய்வோம் புதியதோர் உலகம்
D) புதியதோர் உலகம் செய்வோம்.

190. 'மலரும் மணமும் போல' — உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) ஒற்றுமை
B) வேற்றுமை
C) துன்பம்
D) புகழ்.

191. 'இடியோசை கேட்ட நாகம் போல' — உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) மகிழ்ச்சி
B) அச்சம்
C) சிறப்பு
D) இறப்பு.

192. 'அனலில் விழுந்த புழு போல' — உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) துன்பம்
B) ஆறாத்துயரம்
C) மகிழ்ச்சி
D) சிறுமை.

193. 'தாமரை இலை தண்ணீர் போல' — உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) பற்று
B) சிறப்பு
C) மேன்மை
D) பற்று அற்று இருத்தல்.

194. 'அச்சில் வார்த்தாற் போல' — உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) பொய்யானது
B) உண்மைத் தன்மை
C) கடுமையானது
D) வலிமையற்றது.

195. நின்றனன் அவ்வழி நிகழ்ந்த தென்னெனில

துன்றுபூஞ் சோலைவாய் அரக்கன் - சீர்மோனையைச் சுட்டுக.

A) நின்றனன் — அவ்வழி
B) நிகழ்ந்த — தென்னெனில
C) நின்றனன் — நிகழ்ந்த
D) நிகழ்ந்த — சோலைவாய்.

196. பாரதப் பூமி பழம்பெரும் பூமி

நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர் ! - சீர்மோனையைச் சுட்டுக.

A) பாரதப்பூமி — பழம்பெரும்

B) பழம்பெரும் — பாரதப்பூமி

C) நீரதன் — புதல்வர்

D) புதல்வர் — நினைவகற்.

197. பனித்த சடையும் பவளம் போல்

மேனியிற்பால் வெண்ணீறும் - அடி எதுகையைச் சுட்டுக.

A) பனித்த — மேனியிற்பால்

B) பனித்த — பவளம்

C) சடையும் — பவளம்

D) பனித்த — சடையும்

198. பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் - மோனையைத் தேர்க :

A) பொன்புனை — ளாடும்

B) பொன்புனை — பொற்கழல்

C) மன்று — ளாடும்

D) மன்று — பொற்கழல்.

199. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் - இயைபினைக் கண்டறிக.

A) துப்பார்க்குத் — துப்பாய

B) துப்பார்க்குத் — துப்பார்க்குத்

C) துப்பார்க்குத் — துப்பாக்கி

D) துப்பாய — துப்பார்க்கு.

200. பிரித்து எழுதுக : கொங்கலர்தார்

A) கொங்கலர் + தார்

B) கொ + கலர்தார்

C) கொங்கு + அலர் + தார்

D) கொங்க + அலர்தார்.

( SPACE FOR ROUGH WORK )

( SPACE FOR ROUGH WORK )

**KALI**

வினாத்தாள் வரிசை **A**

பதிவு எண் [ ]

# 2011

# பொது அறிவும் பொதுத் தமிழும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. வினாத் தொகுப்பு **[A]**, **[B]**, **[C]** அல்லது **[D]** என நான்கு வரிசைகளில் அச்சிடப்பட்டுள்ளது. (இந்தப் பக்கத்தின் இடது மேல் மூலையில் உள்ள கட்டத்தைப் பார்க்கவும்) விண்ணப்பதாரர் வினாத்தாள் வரிசையை விடைத்தாளில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் குறித்துக் காண்பிக்க வேண்டும். உதாரணமாக ஒரு விண்ணப்பதாரர் **[A]** என்னும் வினாத் தொகுப்பு பெற்றிருந்தால் அவர் அதை தன்னுடைய விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் கீழே காண்பித்துள்ளவாறு நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [B] [C] [D]

5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
6. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர் மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீங்கள் எழுத வேண்டும்:- தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
9. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]

10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
12. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
13. 1 முதல் 100 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
14. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

**ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET**